# செயலாளர் நாயகம்

# மனித உரிமைகள் தினத்துக்கான செய்தி

# நியூயோர்க், 2021 டிசம்பர் 10

எமது உலகம் இக்கட்டான ஒரு நிலையில் உள்ளது.

கொவிட் - 19 பெருந்தொற்று, காலநிலை இடர்ப்பாடுகள் மற்றும் எமது வாழ்வின் அனைத்து பகுதிகளிலும் புகுந்துவிட்ட டிஜிட்டல் தொழில்நுட்பம் என்பன மனித உரிமைகள் மீது புதிய அச்சுறுத்தல்களை உருவாக்கியுள்ளன.

புறந்தள்ளுதல் மற்றும் பாரபட்சம் என்பன மலிந்துவிட்டன.

பொது இடங்கள் அருகி வருகின்றன.

தசாப்தங்களுக்குப் பின்னர் முதன்முறையாக வறுமையும் பட்டினியும் அதிகரித்துள்ளது.

மில்லியன் கணக்கிலான சிறுவர்கள் கல்விக்கான தமது உரிமைகளை இழந்து வருகின்றனர்.

சமத்துவமின்மை ஆழமாக ஊடுருவுகின்றது.

ஆனால் எம்மால் வேறொரு வழியை நாட முடியும்.

இன்றிலிருந்து எழுபத்து மூன்று வருடங்களுக்கு முன், ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றது.

இவ் எளிய பிரகடனத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொள்கைகள் எந்தவொரு இடத்திலுமுள்ள அனைத்து மக்களதும் குடியியல், பொருளாதார, கலாசார, சமூக மற்றும் அரசியல் என அனைத்து மனித உரிமைகளையும் சாத்தியமாக்குவதற்கு உறுதுணையாக அமைகின்றன.

பெருந்தொற்றில் இருந்தான மீட்சியானது மனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் பரவலாக்குவதற்கான, அத்துடன் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஒரு வாய்ப்பாக நிச்சயம் அமைதல் வேண்டும்.

நீதியின் மீதான நம்பிக்கை மற்றும் சட்டங்களினதும் அமைப்புகளினதும் நடுநிலைமை

கண்ணியமான வாழ்க்கையை அடையலாம் என்ற தன்னம்பிக்கை

மக்களுக்கு நியாயமான விசாரணை கிடைப்பதோடு அவர்களது மனக்குறைகளை சமாதானமான முறையில் தீர்த்துக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கை

எமது மானுட குலத்தின் அங்கத்தவர் ஒவ்வொருவரது உரிமைகளுக்காகவும் ஐக்கிய நாடுகள் துணை நிற்கும்.

இன்றும் ஒவ்வொரு நாளும், அனைவருக்குமான நீதி, சமத்துவம், கண்ணியம் மற்றும் மனித உரிமைகளுக்காக நாம் செயற்படுவோம்.

மனித உரிமைகள் தின வாழ்த்துக்கள்.